Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



ச.கண்ணனூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.ஜெ.கணேசன்

நக.எண். 879/2024/அ 1 நாள். 09.01.2025

பொருள் :- குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - ச.கண்ணனூர் சிறப்புநிலை பேரூராட்சி - ச.கண்ணனூர் மேற்கு கிராமம் புல எண்.84/7A1, 7A2, 7A3, 7A4-ல் 0.85 ஏக்கர் 3450ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருச்சிராப்பள்ளி அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம் ம.வ.ந.ஊ.இ.இ.(தி.மா) எண்.202/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது - **இறுதி ஒப்புதல் அளித்து ஆணையிடுதல்** - தொடர்பாக.

பார்வை :-

1. இணை இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, Town and Country Planning Department (Planning Permission) Kajamalai Main Road, திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் கடிதம் ROC No.SWP-RH9JB8GO/35330/2024/ 2024/TCP Date.10.08.2024 உடன் இணைத்து பெறப்பட்ட இம்மனைப்பிரிவிற்கான வரைபடம் ம.வ.ந.ஊ.இ.இ.(தி.மா) எண்.202/2024 என எண்ணிடப்பட்டது. (இணையதள வழியில் வரப்பெற்றது)
2. அரசாணை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
3. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
4. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
5. அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.23.09.2020.
6. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.09.12.2020.
7. அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.16.07.2022.
8. அரசு கடித எண்.19113/NOV4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.30.08.2017.
9. இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
10. இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.320/2022/TCP3, நாள்.07.01.2022.

Scanned with OKEN Scanner

11. திரு.ஜெயபாலன், 4/6, அம்மன்நகர், சகண்ணனூர் என்பவரால் வழங்கப்பட்டுள்ள நன்கொடை ஆவண பத்திர எண்கள்.6989/2024 நாள் 09.10.2024.
12. திரு.ஜெயபாலன், 4/6, அம்மன்நகர், சகண்ணனூர் என்பவரது கடிதம் நாள் 26.10.2024
13. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 144/ 2024 நாள் 29.11.2024.
14. மண்ணச்சநல்லூர் பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரின் சான்று நாள் 28.12.2024.
15. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 166 / 2024 நாள் 30.12.2024.
16. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு கடித நாள்.06.01.2025.
17. திரு.ஜெயபாலன், 4/6, அம்மன்நகர், சகண்ணனூர் என்பவரது கடிதம் நாள் 09.01.2025.
18. நில பயன்பாடு மாற்றக்கட்டணம் IFHRMS இணையதள செலுத்துச்சீட்டு எண்.20250109010365, நாள்.09.01.2025.
19. பேரூராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய இதர கட்டணங்கள் இணையதளம் வழி தொகை செலுத்தப்பட்ட நாள்.09.01.2025
20. மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்.

****

ஆணை:-

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சகண்ணனூர் சிறப்புநிலை பேரூராட்சி, சகண்ணனூர் மேற்கு கிராமம் புல எண்.84/7A1, 7A2, 7A3, 7A4-ல் 0.85 ஏக்கர் 3450ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் திரு.ஜெயபாலன் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒப்புதல் எண்ம.வ/ந.ஊ.இ.இ.(தி.மா) எண்.202/2024 என எண்ணிடப்பட்டு இணையதள வழியில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மனைப்பிரிவுக்குட்பட்ட பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோக பயன்பாட்டு இடங்கள் பார்வை 11ல் கண்டுள்ள நன்கொடை ஆவணத்தின்படி பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மனைப்பிரிவில் அடிப்படை வசதி பணிகளான மழைநீர் வடிகால், சாலை மற்றும் குடிநீர் குழாய்கள் பணிகளை பார்வை (13)இல் கண்டுள்ள மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் மனைப்பிரிவு உரிமையாளரால் மண்ணச்சநல்லூர் பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரின் மதிப்பீட்டின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளை இப்பேரூராட்சி பொறியாளரால் ஆய்வு செய்து பார்வை (14)ல் கண்டுள்ளவாறு சான்றளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு பார்வை 14ல் காணும் விபரப்படி நில பயன்பாடு மாற்று கட்டணம் 09.01.2025ம் தேதியன்று அரசு தலைப்பில் தொகை செலுத்தப்பட்டுள்ளது. பேரூராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய இதர கட்டணங்கள் பேரூராட்சி E-Taxation (Adayar Indian Bank) கணக்கில் 09.01.2025ம் தேதி செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான சலான் நகல் பார்வை 17ல் காணும் விபரப்படி பெறப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

மேலும் மனைப்பிரிவுதாரரால் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் அரசு தலைப்பிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைப்பிலும், பேரூராட்சி கணக்கிலும் செலுத்தப்பட்டுள்ளது.

1. அரசு தலைப்பில் செலுத்தியது (சந்தை மதிப்பில் 3% தொகை) - ரூ.3,33,540/-
2. மின்சார வாரியத்திற்கு செலுத்தியது (தெருவிளக்குகள்) - ரூ.1,22,851/-
3. பேரூராட்சி கணக்கில் செலுத்தியது
   i. கூர்ந்தாய்வு கட்டணம் - ரூ.17,000/-
   ii. ஆய்வு கட்டணம் - ரூ.1,000/-
   iii. காலியிட வரி - ரூ.96,356/-
   iv. நூலக வரி - ரூ.9,636/-
   v. மனைப்பிரிவு வகைபாடு கட்டணம் - ரூ.20,000/-
   vi. இதரம் - ரூ.85,000/-

பார்வை 15ல் காணும் ச.கண்ணனூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.166, நாள்.30.12.2024-ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் அவர்களின் பார்வை 1ல் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குப்பட்டு **காருண்யாநகர் கிழக்கு விஸ்தரிப்பு** என்ற இக்குடியிருப்புமனைப்பிரிவு மற்றும் வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

இந்த மனைப்பிரிவு தற்போது வார்டு எண்.12 மண்ணச்சநல்லூர்ரோடு பகுதியில் அமைந்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

1. மனைப்பிரிவின் பரப்பளவு - 0.85 ஏக்கர் (4350.00 ச.மீ)
2. சாலையின் பரப்பளவு மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பளவு வரைபடத்தின்படி - 2146.0 ச.மீ
3. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது (சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்) - 1304.0 ச.மீ
4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது - 27.30 ச.மீ
5. பொது உபயோகம் (உள்ளாட்சி அமைப்பு) - 13.24 ச.மீ
6. கோரிய மனைகள் - 17
7. ஒதுக்கிய மனைகள் - 17

நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் ம.வ/ந.ஊ.உ.இ.இ(தி.மா) எண்.202/2024 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

2. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள் பொது ஒதுக்கீடுகளில் அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள (Splay) திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகள் குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019-ல் குறிப்பிடப்பட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன்அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியில் அனுமதி பெற வேண்டும்.

6. மனையின் ஊடே குறைந்த மின்அழுத்த / உயர் மின்அழுத்த மின்கம்பி பாதை / தந்திக்கம்பிப் பாதை அமைந்தால், கம்பி பாதை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்து உள்ளவாரோ மனுதாரர்கள் தமது சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.

7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

8. கடை பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

9. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும், நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் இருபுறமும் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

10. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் அரசு விதிமுறைகளின்படி நகர் ஊரமைப்பு துறை / பேரூராட்சியிடம் அனுமதி பெற வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்பட்டது. உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைபிரிவு

Scanned with OKEN Scanner

அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கான எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யயப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி இப்பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள இறுதி ஒப்புதலும் ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

13. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6x4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

14. மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளை பொது சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவுத் தொகையினையும் இப்பேரூராட்சிக்கு செலுத்தவேண்டும்.

15. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3.00 மீட்டர் திறவெளி விடப்படவேண்டும்

16. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3.0 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருகுழி, மாட்டுத்தொழுவம் உந்துவண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படவேண்டும். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3.00 மீட்டர் / 3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

17. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்பட கூடாது. கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ தூய்மையாக பராமரிக்கவேண்டும்

18. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மற்றும் இப்பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ள இறுதி ஒப்புதல் ஆணை நகல்களை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

19. இம்மனைப்பிரிவு பகுதிக்கு இம்மனைப்பிரிவுதாரர்களாகிய தங்களது சொந்த பொறுப்பில் தேவையான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

20. மேற்காணும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட கட்டணங்கள் மற்றும் பேரூராட்சியில் செலுத்தப்பட்ட கட்டணங்கள் குறைவு என உள்ளாட்சி நிதித்தணிக்கையில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டால், குறைவுத் தொகையினை மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்படவேண்டும்.

21. மனைப்பிரிவுதாரரால் ஏற்படுத்தப்பட்ட தார்சாலை, வடிகால் வசதி மற்றும் குடிநீர் குழாய் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஒப்புதல் பெறப்பட்ட நாள் முதல் ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி (குடியிருப்பு கட்டிடங்கள் கட்டியபின்) அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும். இதில் பேரூராட்சியில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.

22. இந்த இறுதி ஒப்புதல் ஆணை இக்குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 17 மனைகளுக்கு மட்டுமே பொருந்தும். இதன் அருகாமையில் உள்ள எவ்விதமான மனைகளுக்கும் பொருந்தாது.

இணைப்பு :- இறுதி ஒப்புதல் வரைபடம் - 1

செயல் அலுவலர்
சகண்ணனூர் சிறப்புநிலை பேரூராட்சி
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
09/01/2025

பெறுதல்:-

திரு.ஜெயபாலன்,
4/6, அம்மன்நகர்,
மண்ணச்சநல்லூர்ரோடு,
சகண்ணனூர்.

நகல்:-

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வட்டாட்சியர், (நில அளவை பிரிவு) வட்டாட்சியர் அலுவலகம், மண்ணச்சநல்லூர் அவர்களின் மேல்நடவடிக்கைகாக (இறுதி ஒப்புதல் வரைபடத்துடன் பொது ஒதுக்கீடுகள் சம்மந்தப்பட்ட அரசு அலுவலகங்கள் பெயரில் தனி பட்டா மாற்றம் செய்திடும் பொருட்டு)
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மண்ணச்சநல்லூர் (மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் இறுதி ஒப்புதல் வரைபடத்துடன் தொடர் நடவடிக்கைக்காக)

Scanned with OKEN Scanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate